## May 5, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்துப்போட்டியிட்ட விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் (தவெக) 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

(i) திராவிடக் கட்சி பாரம்பரியம் அல்லாத தவெக தனித்துப்போட்டியிட்டு பலம் வாய்ந்த திமுக, அதிமுக கூட்டணிகளை வென்று தமிழக அரசியலில் வரலாற்று சாதனையைப் படைத்துள்ளது.

(ii) பெரும்பான்மைக்கு தேவை '118' இடங்கள்

- தவெசு தனித்துப் தனித்துப் போட்டியிட்டு 108 இடங்களில் பெற்றிருந்தாலும், அக்கட்சி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கத் தேவையான '118' என்ற எண்ணுக்கான இடங்களைப் பெறவில்லை.

(iii) தமிழக ஆளுநரிடம் முடிவு

- தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றுள்ள விஜய்யின் தவெகவுக்கு ஆட்சி அமைக்கத் தேவையான 118 இடங்கள் கிடைக்காத நிலையில், யாரை ஆட்சி அமைக்க அழைப்பது என்ற முடிவு தமிழக ஆளுநரிடம் தான் உள்ளது.
- முதலில் தனிப்பெரும் கட்சியான தவெகவை ஆட்சி அமைக்க அழைத்து சட்டப்பேரவையில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கக் கோருவது, அல்லது தேர்தலுக்கு பிந்தைய கூட்டணியின் அடிப்படையில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க அழைப்பது ஆகிய இரண்டு வாய்ப்புகள் ஆளுநருக்கு உள்ளன.
- எனினும், தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களின் ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகர், தற்போது கேரளத்தில் இருக்கிறார். அந்த மாநிலத்தில் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சி பொறுப்பை ஏற்கும் பணிகளை முடித்துவிட்டு, தமிழகம் திரும்புவார் என்பதால் விஜய்க்கு ஆதரவு திரட்ட அவகாசம் உள்ளதாக அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

2. நெதர்லாந்தைச் சேர்ந்த சொகுசு சுற்றுலா கப்பலில் பரவிய 'ஹன்டா' தீநுண்மி (வைரஸ்) பாதிப்பால் 3 பயணிகள் உயிரிழந்தனர்; மேலும் மூவர் ஆபத்தான நிலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

(i) உயிரிழந்தவர்களில் இருவர் நெதர்லாந்தைச் சேர்ந்த தம்பதியர் என்றும், மற்றொருவர் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ii) ஆர்ஜென்டீனாவிலிருந்து அன்டார்டிகா வழியாக ஆப்பிரிக்காவின் கேப் வெர்டே தீவு நாட்டை நோக்கி 150 பயணிகளுடன் வந்த 'எம்.வி.ஹோண்டியஸ்' கப்பலில் இந்த வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

(iii) பாதிக்கப்பட்டவர்களில் வருக்கு நடத்தப்பட்ட ஆய்வகச் சோதனையில் ஹன்டா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. எலிகளின் எச்சம், சிறுநீர், உமிழ்நீர் ஆகியவற்றின் மூலம் காற்றில் பரவும் இந்த ஹண்டா வைரஸ், மனிதர்களுக்குக் கடுமையான சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தும் தன்மை கொண்டது.

(iv) காய்ச்சல், தசை வலி போன்ற அறிகுறிகளுடன் சாதாரண தொடங்கி, இதயம் மற்றும் நுரையீரலைச் செயலிழக்கச் செய்யும் இந்நோயால் பாதிக்கப்படுபவர்க ளில் 40 சதவீதம் பேர் உயிரிழக்க வாய்ப்புள்ளதாக மருத்துவ வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

(v) தற்போது கேப் வெர்டே கடற்பகுதியில் நங்கூரமிட்டுள்ள சொகுசு கப்பலில் உள்ள பயணிகளைத் தரையிறங்க அந்நாட்டு அரசு அனுமதி மறுத்துள்ளது. அதேநேரம், கப்பலில் உள்ள மற்ற பயணிகளின் ஆரோக்கிய நிலை குறித்து உலக சுகாதார அமைப்பு தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது.

3. பிலிப்பின்ஸ் நாட்டின் புகழ்பெற்ற மாயோன் எரிமலையில் இருந்து கடந்த வார இறுதியில் பெருமளவில் எரிமலைச் சாம்பல் வெளியேறியது. எரிமலையின் தென்மேற்கு சரிவில் தேங்கியிருந்த எரிமலைக் குழம்புப் படிமங்கள் திடீரென சரிந்து விழுந்ததால், அடர் சாம் பல் மூட்டம் அப்பகுதியில் உள்ள 87 கிராமங்களைச் சூழ்ந்தது.

4. இணையவழி தங்க வர்த்தகத்தை இன்னும் எளிமையாகவும் முறைப்படியாகவும் மாற்றுவதற்காக, 'மின்னணு தங்க ரசீது (இஜிஆர்)' எனும் புதிய முதலீட்டு முறையை தேசியப் பங்குச் சந்தை (என்எஸ்இ) திங்கள்கிழமை அறிமுகப்படுத்தியது.

(i) மின்னணு தங்க ரசீது (இஜிஆர்) என்பது காகிதமில்லாத ஒரு முதலீட்டு முறையாகும். முதலீட்டாளர்கள் வாங்கும் தங்கம், எண்ம முறையில் அவர்களின் கணக்கில் சேமிக்கப்படும். ஒவ்வொரு ரசீதுக்கும் ஈடாக, அதற்கு இணையான எடையுள்ள உண்மையான தங்கம் செபி அமைப்பால் சான்றளிக்கப்பட்ட பாதுகாப்பான கிடங்குகளில் சேமித்து வைக்கப்படும்.

(ii) இதன் தொடக்கமாக, ஒரு கிலோ எடை கொண்ட தங்கக் கட்டியை மின்னணு ரசீதாக மாற்றி வர்த்தகம் செய்யும் பணி வெற்றிகரமாகத் தொடங்கிவைக்கப்பட்டது.

(iii) இந்த முதலீட்டு முறை இந்தியப் பங்குச்சந்தை ஒழுங்காற்று வாரியமான செபியால் அங்கீகரிக்கப்பட்டது. தங்கம் வர்த்தகத்தில் முழுமையான வெளிப்படைத் தன்மையையும், அதிக பாதுகாப்பையும் இது உறுதி செய்வதோடு, பாரம்பரிய தங்கச் சந்தையையும் நிதிச் சந்தையையும் இணைக்கும் பாலமாகச் செயல்படும் என்று பங்குச் சந்தை நிர்வாகம் கூறியுள்ளது.

5. ஃபார்முலா ஒன் கார் பந்தயத்தில், நடப்பு சீசனின் 4-ஆவது ரேஸான மியாமி கிராண்ட் ப்ரீயில், இத்தாலி வீரரும், மெர்சிடஸ் டிரைவருமான கிமி ஆன்டனெலி வெற்றி பெற்றார். கோப்பையுடன் கிமி ஆன்டனெலி ஏற்கெனவே, சீன கிராண்ட் ப்ரீ, ஜப்பான் கிராண்ட் ப்ரீ ஆகியவற்றிலும் வென்ற ஆன்டனெலிக்கு இது தொடர்ந்து 3-ஆவது வெற்றியாகும் (ஹாட்ரிக்).

6. கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி ஆட்சியை இழந்ததைத் தொடர்ந்து, நாட்டில் 1977-ஆம் ஆண்டுக்குப் பின்னர், கடந்த 50 ஆண்டுகளில் எந்தவொரு மாநிலத்திலும் இடதுசாரி கட்சிகளின் ஆட்சியே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

(i) மாநிலங்களில் நிர்வாக சக்தியாகவும், தேசிய அரசியலில் செல்வாக்குக் கொண்ட கட்சிகளாகவும் 'இடதுசாரி கட்சிகள் இருந்தன. இந்நிலையில், நாட்டில் கேரளத்தில் மட்டும்தான் இடதுசாரி ஆட்சி நடைபெற்று வந்தது. அங்கும் இடதுசாரி கட்சிகள் தோல்வி அடைந்ததன் மூலம், அக்கட்சிகளின் முந்தைய நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

(ii) முன்னதாக மேற்கு வங்கத்தில் 34 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்து இடதுசாரி முன்னணி, 2011-ஆம் ஆண்டு ஆட்சியை இழந்தது. அதன் பின்னர், 2018-ஆம் ஆண்டு திரிபுராவில் இடதுசாரிகள் ஆட்சியை இழந்தனர்.

(iii) நாட்டில் கேரளத்தில் மட்டும்தான் கடந்த 2016 முதல் இடதுசாரிகள் ஆட்சி நடைபெற்று வந்த நிலையில், தற்போது அங்கும் அவர்கள் ஆட்சியை இழந்துள்ளனர்.

(iv) நாட்டின் அரசியல் வரலாற்றில் கேரளம் தனித்துவமான இடத்தைக் கொண்டிருந்தது. கடந்த 1957-ஆம் ஆண்டு கேரளத்தில் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் கீழ், இடதுசாரி அரசு அமைந்தது. இதன்மூலம், உலகிலேயே முதல்முறையாக ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அரசு அமைந்தது.

(v) ஒரு காலத்தில் தேசிய அளவில் மிகவும் செல்வாக்குமிக்க இடம் இடதுசாரிகளுக்கு இருந்தது. சுதந்திரத்துக்குப் பிறகு நாடாளுமன்றத்தில் மிகப் பெரிய எதிர்க்கட்சியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உருவெடுத்தது.

(vi) 1990, 2000-ஆம் ஆண்டுகளுக்கு இடையில், மக்களவையில் முக்கிய இடத்தை இடதுசாரிகள் வகித்ததுடன்,

கூட்டணி அரசியலில் முக்கிய பங்கு வகித்தன.

(vii) 2004-ஆம் ஆண்டில் இடதுசாரிகளின் செல்வாக்கு உச்சம் தொட்டது. அப்போது இடதுசாரிகள் 61 மக்களவைத் தொகுதிகளில் வென்று, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு தெரிவித்து, முக்கிய கொள்கை முடிவுகளுக்கு வழிகாட்டி வந்தது. அவ்வாறு நாட்டின் அரசியலில் முக்கிய பங்கு வகித்த இடதுசாரிகளின் ஆட்சி தற்போது எந்த மாநிலத்திலும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

7. இந்தியா எத்தனால் கலந்த பெட்ரோலை நோக்கி நகர்வது குறித்த ஆய்வு

(i) பெட்ரோலுடன் எத்தனால் கலப்பதன் முதன்மை நோக்கம், கச்சா எண்ணெய் இறக்குமதியைச் சார்ந்திருக்கும் இந்தியாவின் கடும் சார்பைக் குறைப்பதும், காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதும் ஆகும்.

(ii) எத்தனால் கலப்பதன் நன்மைகள்:

- 20% என்ற விகிதத்தில் எத்தனால் கலப்பதன் மூலம், இந்தியா தனது கச்சா எண்ணெய் இறக்குமதியை சுமார் 10 மில்லியன் டன்கள் வரை குறைக்க முடியும்; இதன் மூலம் ஆண்டுதோறும் 8 முதல் 10 பில்லியன் டாலர்கள் வரையிலான அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த இயலும்.
- எத்தனால் கலந்த எரிபொருள் மிகவும் தூய்மையாக எரிகிறது; இதன் விளைவாக வாகனங்களிலிருந்து வெளியாகும் கார்பன் உமிழ்வு மற்றும் காற்று மாசுபாடு குறைகிறது.
- கரும்பு மற்றும் மாற்றுப் பயிர்கள் மூலம் விவசாயிகளுக்கும் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கும் நிலையான வருமானத்தை வழங்குவதன் வாயிலாக, இது கிராமப்புறப் பொருளாதாரத்தை வலுப்படுத்துகிறது.
- சர்க்கரை உற்பத்திக்கு அரசு வழங்க வேண்டிய மானியங்களின் அளவைக் குறைப்பதன் மூலம், அரசின் மீதான நிதிச்சுமையை இது தணிக்கிறது.

(iii) நீர் பயன்பாடு சார்ந்த சிக்கல்கள்:

- கரும்பு என்பது அதிக அளவு நீரை உறிஞ்சி வளரும் ஒரு பயிராகும். ஒரு லிட்டர் எத்தனால் உற்பத்தி செய்வதற்கு, பயிர் சாகுபடிக்குத் தேவைப்படும் நீரையும் சேர்த்து, மொத்தம் 3,000 முதல் 5,000 லிட்டர்கள் வரை நீர் தேவைப்படுகிறது.
- பிரம்மாண்டமான தேவைகள்: 20% எத்தனால் கலப்பு என்ற இலக்கை அடைவதற்கு, இந்தியாவுக்கு ஆண்டுதோறும் சுமார் 2,200 கோடி லிட்டர்கள் எத்தனால் தேவைப்படுகிறது. இந்தத் தேவைக்காக மட்டுமே, மலைக்க வைக்கும் அளவாக 3,000 முதல் 5,000 TMC வரையிலான நீர் தேவைப்படுகிறது.
- ஆற்று நீரோட்டத்துடனான ஒப்பீடு: ஒரு ஒப்பீட்டிற்காகக் கூறவேண்டுமெனில், காவிரி ஆற்றின் மொத்த ஆண்டு நீர்வரத்தே 740 TMC மட்டுமே ஆகும்; ஆனால் எத்தனால் உற்பத்திக்குத் தேவைப்படும் நீரின் அளவு இதைவிடப் பல மடங்கு அதிகமாக உள்ளது.
- நிலத்தடி நீர் வற்றுதல்: மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களில் கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பு 20 முதல் 35 சதவீதம் வரை அதிகரித்துள்ளது; இது அந்நிலங்களில் நிலத்தடி நீர்மட்டம் கடுமையாகக் குறைவதற்கு வழிவகுத்துள்ளது.
- மாநிலங்களுக்கிடையிலான தாக்கம்: கர்நாடகா போன்ற நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் (மேல்நிலை மாநிலங்களில்) கரும்பு சாகுபடிக்காக நீர் பயன்பாடு அதிகரிப்பது, தமிழ்நாடு போன்ற கீழ்நிலை மாநிலங்களுக்கு வரும் நீரின் அளவை கணிசமாகக் குறைத்துவிடக்கூடும்.

(iv) அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:

- எத்தனால் கலப்பு குறித்த கொள்கை முதன்முதலில் 2003-ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது; தொடக்கத்தில் குறிப்பிட்ட சில மாநிலங்களில் 5% எத்தனால் கலப்பு என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.
- 2014-ஆம் ஆண்டிற்குப் பிறகு இம்முயற்சி பெரும் உத்வேகம் பெற்றது; 2025–26-ஆம் ஆண்டிற்குள் நாடு

முழுவதும் 20% எத்தனால் கலப்பு (E20) என்ற இலக்கை அடைவதற்கு அரசு உறுதியான திட்டத்தை வகுத்தது. * இந்தியா ஏற்கனவே ஆரம்பக் கட்டங்களிலிருந்து முன்னேறி, 10% முதல் 15% வரையிலான கலப்பு விகிதத்தை அடைந்துள்ளது.

- கரும்பு மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்காக, மக்காச்சோளம் மற்றும் சேதமடைந்த அரிசி போன்ற பிற மூலங்களிலிருந்து எத்தனால் உற்பத்தியை அரசாங்கம் ஊக்குவிக்கிறது.

(v) எதிர்காலத்திற்கான பரிந்துரைகள்:

- பிராந்திய நீர் இருப்புக்கு ஏற்ப பயிர் தேர்வுகளை ஒருங்கிணைக்கும் ஒரு தேசிய வேளாண் கொள்கை தேவைப்படுகிறது.
- தற்போது, இந்தியாவின் மழைநீரில் 10% மட்டுமே சேமிக்கப்படும் நிலையில், 30,000 டிஎம்சி நீர் கடலில் வீணாகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, அரசாங்கம் நதிகளை இணைப்பதற்கும் நீர் சேமிப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

8. பள்ளி சீருடைத் துறையின் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரத் தாக்கம்

- வெறும் ஒரு கிலோகிராம் பாலியஸ்டரை (பொதுவாக சீருடைகளுக்குப் பயன்படுத்தப்படுவது) உற்பத்தி செய்ய, 62 லிட்டர் நீர், 153 கிலோகிராம் பெட்ரோலியம் மற்றும் 217 மெகாஜூல் ஆற்றல் தேவைப்படுகிறது.
- கார்பன் தடம் (Carbon Footprint): 1 கிலோகிராம் பாலியஸ்டர் உற்பத்திச் செயல்முறையானது, 21 கிலோகிராம் கார்பன் டை ஆக்சைடை வளிமண்டலத்தில் வெளியிடுகிறது.
- பெருமளவிலான கழிவு உருவாக்கம்: இந்தியாவில் சுமார் 24.6 கோடி பள்ளி செல்லும் குழந்தைகள் உள்ளனர். ஒவ்வொரு குழந்தையும் ஆண்டுக்கு ஒரு சட்டையை மட்டும் தூக்கி எறிந்தால் கூட, அது 31,980 டன் ஜவுளிக் கழிவுகளை உருவாக்கி, குப்பை மேடுகளை நிரப்பிவிடுகிறது.
- வளங்களின் குறைபாடு: தற்போதைய "எடுத்தல்-உருவாக்குதல்-நீக்குதல்" (take-make-dispose) எனும் நேரியல் பொருளாதார மாதிரியானது, சுற்றுச்சூழல் மாசுபாட்டை அதிகரிக்கும் அதே வேளையில், இயற்கை வளங்களையும் மிக வேகமாகச் சுரண்டித் தீர்க்கிறது.

(i) சீருடைகளை மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு செய்வதற்கான வழிகள்:

- நல்ல நிலையில் உள்ள பழைய சீருடைகளைச் சேகரித்து, தேவைப்படும் மாணவர்களுக்கு விநியோகிப்பதற்காக "சீருடை வங்கிகளை" (Uniform Banks) நிறுவுதல்.
- "Style Her Empowered" (S.H.E.) போன்ற புதுமையான வடிவமைப்பு மாதிரிகளை ஏற்றுக்கொள்வது; இதில் சீருடைகள் "குழந்தையின் வளர்ச்சிக்கு ஏற்ப விரிவடையும்" வகையில் வடிவமைக்கப்பட்டு, அவற்றின் பயன்பாட்டுக் காலத்தை நீட்டிக்கின்றன.
- ஆடைகள் நீடித்து உழைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு, இறுதியில் மீண்டும் உற்பத்திச் சுழற்சிக்குள் மறுசுழற்சி செய்யப்படும் ஒரு "வட்டப் பொருளாதாரத்திற்கு" (Circular Economy) மாறுதல்.
- பெற்றோர்கள் தாங்கள் பயன்படுத்திய கல்விப் பொருட்கள் மற்றும் சீருடைகளை வாங்கவோ, விற்கவோ அல்லது பரிமாறிக் கொள்ளவோ "Kitkit" போன்ற இணையதளச் செயலிகளைப் பயன்படுத்துதல்.

(ii) தற்போதைய அமைப்பின் விளைவுகள்:

- பெற்றோர்கள் மீதான நிதிச்சுமை: பள்ளிகள் அடிக்கடி சீருடைகளின் நிறங்கள், வடிவமைப்புகள் அல்லது சின்னங்களை மாற்றுகின்றன; இதனால் பழைய சீருடைகள் குழந்தைகளுக்குப் பொருத்தமாக இருந்தாலும் கூட, ஒவ்வொரு ஆண்டும் புதிய சீருடைத் தொகுப்புகளை வாங்க வேண்டிய கட்டாயத்திற்குப் பெற்றோர்கள் தள்ளப்படுகிறார்கள்.
- சந்தைச் சுரண்டல்: பள்ளி சீருடைச் சந்தையானது, பெருமளவிலான லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட ஒரு பிரம்மாண்டமான துறையாகும்; 2024-ஆம் ஆண்டில் இதன் மதிப்பு ₹1.76 லட்சம் கோடியாக இருந்ததுடன், 2034-ஆம் ஆண்டிற்குள் இது ₹3.07 லட்சம் கோடியை எட்டும் என்றும்

எதிர்பார்க்கப்படுகிறது.

- சுற்றுச்சூழல் சீரழிவு: தொடர்ந்து தூக்கி எறியப்படும் ஆடைகள், உலகளாவிய மாசுபாடு மற்றும் கழிவு நெருக்கடிக்குக் கணிசமான பங்களிப்பை அளிக்கின்றன.

(iii) உலகளவில் பள்ளி சீருடைகளின் மறுசுழற்சி முயற்சிகள்:

- ஆப்பிரிக்கா: "S.H.E." திட்டத்தின் கீழ், குழந்தைகள் வளரும்போது அவர்களுக்குப் பொருத்தமாக இருக்கும் வகையிலும், நீண்ட காலம் உழைக்கும் வகையிலும் மாற்றியமைக்கக்கூடிய சீருடைகள் உருவாக்கப்படுகின்றன.
- ஐக்கிய இராச்சியம் (UK): பல பள்ளிகளில் ஒரு மரபு பின்பற்றப்படுகிறது; அதன்படி, மூத்த வகுப்பு மாணவர்கள் தங்கள் சீருடைகளைத் தங்களுக்குக் கீழுள்ள வகுப்பு மாணவர்களுக்கு வழங்குகிறார்கள். "Apparelled Uniforms" மற்றும் இது போன்ற பிற சீருடை வங்கிகள், தரமான பழைய சீருடைகளை விநியோகிப்பதற்குத் துணை நிற்கின்றன.
- அமெரிக்கா: சில பள்ளிகள், கட்டாயமான குறிப்பிட்ட சீருடைகளிலிருந்து விலகி, பெற்றோர்கள் எந்த இடத்திலிருந்தும் மலிவான, மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஆடைகளை வாங்குவதற்கு ஏதுவாக, பொதுவான வண்ண அடிப்படையிலான ஆடை விதிமுறைகளைத் தேர்ந்தெடுத்துள்ளன.
- பின்லாந்து: உலகின் சிறந்த கல்வி முறைகளில் ஒன்றாக அறியப்படும் பின்லாந்தில், மாணவர்கள் சீருடைகளை அணிவதே இல்லை, இதன் மூலம் இந்தக் கழிவுகளை முற்றிலுமாகத் தவிர்க்கின்றனர்.

(iv) அரசாங்கத்திற்கான நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைகள்:

- மாணவர்களிடையே சமத்துவத்தையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதற்காக, சுதந்திரம் பெற்றதிலிருந்து அரசாங்கம் சீருடை முறையைப் பராமரித்து வருகிறது.
- மத்திய மற்றும் மாநில அரசுகள், வண்ணங்களையும் வடிவமைப்புகளையும் தரப்படுத்துவதற்காக தனியார் பள்ளிகளுடன் இணைந்து செயல்பட வேண்டும். இது வெவ்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் சீருடைகளைப் பரிமாறிக்கொள்ள அனுமதித்து, கழிவுகளைக் கணிசமாகக் குறைக்கும்.
- தனித்துவமான துணி வடிவமைப்புகளுக்குப் பதிலாக, பள்ளி சார்ந்த கழுத்துப்பட்டைகள் அல்லது அடையாள அட்டைகள் மூலம் பள்ளி அடையாளத்தைப் பராமரிக்கலாம்.
- மறுசுழற்சி தொழில்நுட்பம் இருந்தாலும், இந்தியாவில் போதுமான உள்கட்டமைப்பு இல்லை; தற்போது, முக்கிய ஜவுளி மறுசுழற்சி திருப்பூர் மற்றும் பானிபட்டில் மட்டுமே குவிந்துள்ளது. அரசாங்கம் இந்த உள்கட்டமைப்பை நாடு முழுவதும் விரிவுபடுத்த வேண்டும்